முடிப்பதற்கு முன்னால் ஒன்றே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"வித்யாம் சவித்யாம் சயஸ்தத்
வேதோ பயக்ம் ஸக
அவித்யாம் ருத்யும்
வித்யாம் ருத மச்நுதே."

'ஞானத்தை யார் அறிகின்றானோ, தன்னுடைய நற்செயல்களை யார் அறிகின்றானோ, அவன் மரணம் அடைவதில்லை. மரணத்தைக் கடக்கின்றான். தன்னுடைய நற்செயல்களால் யார், யாருக்கு நற்செயல்களைச் செய்தானோ, அவன் என்றும் வாழ்கிறான்' என்று உபநிஷத்துக்கள் சொல்வதுபோல, கலைஞர் அவர்கள் மரணத்தைக் கடந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் இருக்கும்வரைக்கும் அவர் வாழவேண்டும். உங்கள் எல்லோருக்கும் சாந்தியும், சமாதானமும் நிகழ வேண்டும். நம் எல்லோருக்கும் ஆண்டவனுடைய அருள் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

முடிப்பதற்கு முன்னால், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் தன்னுடைய மரணத்திற்கு முன்னால் கலைஞர் அவர்களுடைய கையைப் பிடித்து, நான் இன்னும் சிறிது நாளில் இறந்துவிடுவேன். தம்பி, இந்தச் சிறுபான்மையினருக்கு நீங்கள்தான் உதவியாக இருக்கவேண்டுமென்று சொன்னார். அதை அவர்களுக்கு நினைவுபடுத்தி விடைபெறுகிறேன். வாழ்த்துக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், காளியம்மன்பட்டி, அருள்மிகு காளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்

அவர்கள், தங்களுடைய கவனத்தையும், அவையினுடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையிலே இங்கே ஒரு விவரத்தைச் சொல்லியிருந்தார்கள். அதுபற்றிய பதிலை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். குடியாத்தம் பிச்சனூர் அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலில் ஏறத்தாழ 1.4 ஏக்கர் நிலத்தை அபகரித்துவிட்டதாகவும், அங்கே மாறுதல்கள் செய்யப்பட்டு இப்போது தனியார் கல்லூரியினர் வேலி அமைத்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பிரச்சினைக்குரிய அந்த 1.4 ஏக்கர் நிலம் தற்போதும் திருக்கோயில் வசம்தான் இருக்கிறது. இது ஆண்டுதோறும் ஏலத்திற்கு விடப்பட்டு அதிலே சாகுபடியாளர்கள் தொடர்ந்து கரும்பு பயிரிட்டு வருகிறார்கள். நிலைமை இவ்வாறிருக்க, 10 ஆண்டுகளுக்கு முன்னர் 3 பெயர்களில் அப்போது அறங்காவலராக இருந்த பிரகாசம் என்பவர் பத்திரப் பதிவுகளைச் செய்திருப்பதாக அறிய வந்திருக்கிறது. 25 நாட்களுக்கு முன்னர் திருமதி சாந்தா, க/பெ. இராமகிருஷ்ணன், அதைபோல் ரேகா, க/பெ. இராமகிருஷ்ணன் என்பவரும் சத்யாவதி, க/பெ. சக்ரவர்த்தி ஆகிய மூவரும் இந்த நிலத்திலே கல் ஊன்றி வேலி அமைக்க முற்பட்டனர். இதையறிந்த உதவி ஆணையர் அசோக்குமார் உள்ளிட்ட அறநிலையத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அந்த இடத்திற்குச் சென்று அங்கே நடப்பட்ட கல் மற்றும் வேலியை அப்புறப்படுத்தி, இந்த இடம் திருக்கோயிலுக்குச் சொந்தமானது என்று விளம்பரப் பலகை அமைத்திருக்கிறார்கள். ஆனால், இப்போதும் அங்கே கரும்பு பயிரிடப்பட்டு இருக்கிறது என்பதும், அந்த நிலம் திருக்கோயிலின் வசம் இருக்கிறது என்றும், இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்ட மூவர் மீதும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடத்திலே வழக்குப் பதிவு செய்யப்பட்டு இந்தத் தவறிழைத்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அது நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இராமேஸ்வரத்திற்கு ஒரு